மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியப்பன் | நாள் | 27.06.2024 |
| தகப்பனார் பெயர் | ஆறுமுகம் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

5) தற்போது நான் வசித்து வரும் வீட்டிற்கு கதவு எண் என்னவென்றால், க.எண்.1/18 ஆகும். வாதிகள் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை என் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், நான் 70 வருடமாக வசித்து வரும் இடத்தை அவர்களுடைய நிலம் என கூறி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அவ்வாறு 70 வருடங்களாக வசித்து வரும் நிலையில், மேற்படி நிலத்தில் நான் வசித்து வருவதற்கான வருவாய் ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், என் பெயரில் வருவாய் ஆவணங்கள் இல்லை. ஆனால் மேற்படி நிலத்தில் நான் வசித்து வந்ததற்கான மின் கட்டண ரசீதுகள் உள்ளன.

6) வாதிகள் தற்போது வழக்கிட்டு உள்ள சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். ச.எண்.848 ஆகும். மேற்படி ச.எண்.848 ல் உள்ள நிலம் வாதிகளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. வாதிகளுக்கு சாம்பள்ளி கிராமத்தில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. ச.எண்.848 ல் உள்ள நிலத்தில் வாதிகள் தற்போது விவசாயம் செய்து வருகிறார்களா என்றால், ஆமாம்.

7) எனக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் சொத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால், அருள்சாமி மகன் ரொசாரியா என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன். நான் கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண் என்னவென்றால், ச.எண்.848/1 ஆகும். எவ்வளவு நிலத்தை கிரயம் வாங்கினேன் என்றால், 2953 சதுரடி நிலத்தை அதாவது 6-3/4 சென்ட் நிலத்தை கிரயம் வாங்கினேன்.

8) மேற்படி 6-3/4 சென்ட் நிலத்தின் நான்குபுற எல்லைகளின் அளவுகள் என்னவென்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. என்னுடைய கிரய ஆவணம் பி.வா.சா.ஆ.2-ன் படி கிழமேல் இருபுறமும் 66 அடி என்றாலும், தென்வடல் இருபுறமும்

44–1/4 அடி என்றால், சரிதான். என் நிலத்தின் சக்குபந்தி விவரம் என்னவென்றால், சகாயராஜ் வகையறா நிலத்திற்கு – மேற்கு, வடக்கு, தெற்கு, பஞ்சாயத்து ரோட்டிற்கு – கிழக்கு ஆகும். மேற்படி நிலத்தை தவிர ச.எண்.848/1ல் எனக்கு வேறு நிலம் எதுவும் இல்லை என்றால், சரிதான்.

9) என் முன் விற்பனையார் ரொசாரியோ தன் சாட்சியத்தில், வாதி துரைசாமி நிலத்திற்கு 100 மீ தூரம் தள்ளிதான் எனக்கு நிலத்தை விற்றதாக கூறியுள்ளார் என்றால், சரிதான். மேற்படி ச.எண்.848/1ல் 7 வீடுகள் அமைந்துள்ளது. மேற்படி 7 வீடுகள் அமைந்துள்ள இடைவெளியை தான் அவர் 100 மீட்டர் என சொல்லியிருப்பார். வாதிகளின் நிலத்திற்கு மேற்குபுறத்தில் கோம்பை காட்டிற்கு செல்லும் ரோடு அமைந்துள்ளது என்றால், சரிதான். என்னுடைய நிலத்திற்கு எந்த பகுதியில் மேற்படி ரோடு செல்கிறது என்றால், மேற்கு பகுதியில் செல்கிறது. மேற்படி கோம்பைகாடு செல்லும் ரோட்டிற்கு கிழக்கிலும், தெற்கிலும் வாதிகளின் நிலம் உள்ளது என்றால், சரிதான்.

10) என் மனைவியின் பெயர் கலா. என் மனைவி இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால், சரிதான். என் மனைவி ச.எண்.848/1ல் நிலம் ஏதேனும் வாங்கியுள்ளாரா என்றால், 2.90 சென்ட் நிலம் அதாவது 1245–3/4 சதுரடி நிலம் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி நிலத்திற்கு கிழமேல் தென்புறம் 37.5 அடி, கிழமேல் வடபுறம் 38–1/4 அடியும், தென்வடல் இருபுறமும் 33 அடி என்றால், சரிதான். மேற்படி என் பெயரிலுள்ள 2953 சதுரடி நிலமும், என் மனைவி பெயரிலுள்ள 1245–3/4 சதுரடி நிலமும் அடுத்தடுத்து அமைந்துள்ளது என்றால், சரிதான். என் மனைவி பெயரில் உள்ள நிலத்திற்கு சக்குபந்தி விவரங்கள் என்னவென்றால், நான்குபுறமும் சகாயராஜ் வகையறா நிலம் தான் உள்ளது.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஓம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.